C.C 231/18

PW 1

பெயர் கணேசன்

தேதி 18.01.24

**(எதிரி ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் மதுரையிலிருந்து கம்பத்திற்கு எம்டி யாக சென்றுக்கொண்டிருந்தேன். எனதுமுதல் விசாரணையில் மதுரையிலிருந்து கம்பத்திற்கு பழலோடு ஏற்றிக்கொண்டு வந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற லாரியின் எண் TN 64 F 6194 ஆகும். என் முதல்விசாரணையில் நான் கூறியுள்ள லாரி எண் தவறு என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட ரோடு எத்தனை அடி அகல ரோடு என்றால் 30 அடி இருக்கும. விபத்து சமயத்தில் ரோட்டின் நடுவே சென்டர் மீடியன் இல்லை. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண். TN AD 69 2009 ஆகும். அதன் மாடல் தெரியாது. விபத்திற்கு முதல் நாள் நான் கம்பத்திலிருந்து மதுரைக்கு சென்றேன். அன்று இரவு 7 மணிக்கு கிளம்பி மதுரை சென்று மறுநாள் திரும்பி வந்தேன். திராட்சை லோடு ஏற்றி சென்றேன். இரவு துாங்காமல் வாகனத்தை ஒட்டி சென்றேன் என்றால் சரியல்ல. துாங்கிவிட்டு தான் சென்றேன். நான் இரவு துாங்காமல் லாரியை ஓட்டி வந்து அதிகாலையில் சைலோ கார் மீது நான் தான் மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. க.விலக்கு மருத்துவமனையில் வைத்து சார்பு ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது அங்கு வைத்து புகார் மனுவை கொடுத்தேன். குற்ற இறதி அறிக்கையில் என்னை காவல்ஆய்வாளர் விசாரித்ததாக கூறியுள்ளேன் என்றால் சார்பு ஆய்வாளர் தான் விசாரித்தார். விபத்து ஏற்படுத்திய சைலோ கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். சைலோ கார் என் வாகனத்தின் இடது புறம் மோதியது. நான் தவறுதலாக இடது பக்கம் என சொல்கிறேன் என்றாலும் கார் தெற்கிலிருநது வரும் போது எனது வாகனத்தின் வலது பக்கமாக மோதியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் ஒருவர் இறந்துவிடடார். 8 பேருக்கு காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய கார் என் வாகனத்தின் மீது இடித்து பின்பக்கமாக உள்ள பள்ளத்தில் சென்றுவிழுந்துவிட்டது. என் குற்றஇறுதிஅறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கையில்

தீப்பிடித்து எரிந்ததாக கூறியுள்ளேன் என்றும் தீப்பிடித்து எரிந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பா ர்த்தேன். கார் போக்குவரத்துவிதிகளை மதித்து மெதுவாக சரியாக தான் ஓட்டி வந்தார் என்றும் நான் தான் தவறுதலாக லாரியை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டு அதற்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. க.விலக்கு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் எழுத்து மூலமாக புகார் எழுதிதரவில்லை என்றாலும் வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் அவர் எழுதி படித்து காண்பித்ததில் நான் கையெழுத்து செய்தேன். விபத்து நடந்த சமயத்தில் அனைவரும் மயக்கநிலையில் இருந்ததாலும் நான் மட்டும் சுயநினைவில் இருந்ததாலும் என் மீது தவறு வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் எதிரி மீது தவறுதாக பொய் புகார்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியது போல் TN F 6626 என்ற வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.